**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-3 Date : 08.02.2024
Case No. : **O.S. 492-2019** Nationality : Indian
Name : ஜெயபாண்டியன் (கிராம நிர்வாக அலுவலர், உடையாளூர் கிராமம் Religion :
Age :
Father's/Husband's Name :
Village :
Taluk :

வா.சா.3

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது உடையாளூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான் கடந்த 2017 ம் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை அணக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 1.2.2020 ம் தேதியிட்ட சான்று என்னால் வழுங்கப்பட்டதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடைதுதான். மேற்படி சான்று சாசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு 13.06.2019 மற்றும் 10.07.2020 ம் தேதிகளில் அடங்கல் வழங்கியுள்ளேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிய காலத்தில் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்ளில் ரமேஷ் என்பவர் சாகுபடி செய்து வந்தார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். நான் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை அணக்குடி

கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன் என்றால் 18.4.2017 ம் தேதி முதல் 01.7.2020 ம் தேதி வரை பணிபுரிந்தேன். சாசாஆ 2 சான்றில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உரிமையாளர் யார் என்ற விவரமும் யாரிடமிருந்து குத்தகை ஒத்துக்கொள்ளப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சான்றில் அது எந்த பசலிக்காக வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 13.6.2019 ம் தேதிய அடங்கல் ஆவணத்தில் அது எந்த பசலிக்கான ஆவணம் என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் அந்த பசலியில் போக்கிய கடனுக்காக சாகுபடி செய்யப்பட்டதாக விவரம் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். அதில் நடப்பு பசலி என எழுதப்பட்டுள்ளது. நான் கொடுத்துள்ள ஆவணங்களில் முன்னுக்பின்முரணாக விவரங்கள் உள்ளதால் தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. ரமேஷ் எனக்கு வேண்டியவர் என்பதால் நான் எவ்வித ஆவணத்தை பார்வையிடாமல் அவர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக ஆவணங்கள் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.